# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2160 - 2020 පෙබරවාරි මස 14 වැනි සිකුරාදා - 2020.02.14

*2160 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 8 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.-** (i) நிதி (திருத்தம்) சட்டமூலம் 2020, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2020, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, மாச்சு 06ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

27-B82001-353 (2020/02)

# நானாவித அறிவித்தல்கள்
## நிறுவன கலைப்பு அறிவித்தல்

### கொழும்பில் உள்ள மேல் மாகாணம் உயர் நீதிமன்றத்தில் அதன் சிவில் நீதி விசாரணை செயற்பாடு

**தன்மை: நிறுவன கலைப்பு**

*மற்றும்*

**வழக்கு இல.:** HC (Civil) 96/*2019*/CO

*இலக்கம் 18, சென், மைக்கேல்ஸ் வீதி,*
*கொழும்பு 03 இல் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை*
*உடைய வாக்கர்ஸ் பைலிங் (பிறைவட்)*
*லிமிட்டடின் விடயத்தில்*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமுடைய*
*கம்பனிகள் சட்டத்தின் 12ஆம் பகுதியின் விதிகளின் கீழ்*
*மற்றும் ஏற்ப நீதி மன்றத்தால் கலைப்புக்கான ஒரு விண்ணப்பபத்திரத்தின்*
*விடயத்தில்.*

**சிலோன் ஸ்ரீல் கொப்பறேஷன் லிமிட்டட்**
*ஒறுவல அத்துறுகிரிய*

**முறைப்பாட்டாளர்**

*மேல் மாகாணத்தின் உயர் நீதிமன்றத்தால் (கொழும்பில் அமைந்தது) மேற்படி பெயருடைய கம்பனியின் கலைப்புக்காக 2019, திசெம்பர் 12 ஆம் திகதி நடந்த அதன் சிவில் நீதி விசாரணை செயற்பாடு சம்பந்தமாக அத்துறுகிரிய ஒறுவலவில் உள்ள சிலோன் ஸ்ரீல் கோப்பறேஷன் லிமிட்டட்டால் ஒரு முறைபாடு சமர்ப்பிக்கப்பட்டது பற்றியும் கூறப்பட்ட முறைப்பாடு 2020, மார்ச் 13 ஆம் திகதி நீதிமன்றத்தின் முன் வசாரிக்கப்படுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளது பற்றியும் இத்தால் அறிவித்தல் தரப்படுவதுடன் கூறப்பட்ட முறைப்பாட்டின் மீதான கட்டளையை ஆதரிப்பதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்பும் கூறப்பட்ட கம்பனியின் எந்தவொரு கடன் வழங்கியவர் அல்லது பங்களிப்பாளர்கள் விசாரிக்கப்படும் தினத்தில் தனிப்பட்ட முறையில் அல்லது அந்த நோக்கத்துக்கான அவருடைய சட்டத்தரணி மூலம் விசாரணைக்குத் தோன்றலாம் மற்றும் கூறப்பட்ட கம்பனியின் எந்தவொரு கடன் வழங்கியவர் அல்லது பங்களிப்பாளருக்கு முறைப்பாட்டின் பிரதி ஒன்று கீழ் ஒப்பமிட்டவரால் தேவைப்படும் போது அதற்காக விதிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் வழங்கப்படும்.*

*ஒப்பம்*
*பிரதான சட்ட ஆலோசகர்கள்,*
*இல. 11, சென் ஜோஸப்ஸ் பிளேஸ், கொழும்பு 14.*

**குறிப்பு**:- *கூறப்பட்ட முறைப்பாட்டின் வழக்கு விசாரணையில் தோன்றுவதற்கு விரும்பும் எந்தவொரு நபரும் மேலே பெயரிடப்பட்ட பிரதான சட்ட ஆலோசகர்களுக்கு அவ்வாறு பங்குபற்றும் அவருடைய நோக்கம் பற்றி எழுத்து மூலமாக அறிவித்தலை நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ சமர்ப்பிக்க வேண்டும். குறித்த அறிவித்தலில் நபருடைய பெயர் மற்றும் முகவரி பற்றியும் நிறுவனமாக இருந்தால் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியுடன் நபரால் அல்லது நிறுவனத்தால் அல்லது அவர்களின் சட்டத்தரணியால் (இருந்தால்) கையொப்பமிட வேண்டும் என்பதுடன் மேலே பெயரிடப்பட்டவருக்கு 2020, மார்ச் 12 ஆந் திகதி பி. ப. 6.00 மணிக்கு பிந்தாமல் கிடைக்கும்படியாக போதிய கால அவகாசத்துடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*

*02- 284*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.